# பெப்ரவரி – 28 – வியாழன்

### புனித கொர்த்தோனா மார்கரீத்

### பொல்லார் நீதித் தீர்ப்பின்போது நிலைநிற்க மாட்டார்: திபா. 1:5

## முதல் வாசகம் : சீராக் 5 : 1 – 8

உன் செல்வங்களில் நம்பிக்கை வைக்காதே. "எனக்கு அவை போதும்" எனச்சொல்லாதே. உன் நாட்டங்களுக்கும் வலிமைக்கும் அடிமையாகாதே. உன் உள்ளத்து விருப்பங்களைப் பின்பற்றாதே. எனக்கு எதிராய்ச் செயல்படக்கூடியவர் யார்? எனச் சொல்லாதே. ஆண்டவர் உன்னைத் தண்டியாமல் விடமாட்டார். " நான் பாவம் செய்தேன் இருப்பினும், எனக்கு என்ன நேர்ந்துவிட்டது?" எனக்கூறாதே. ஆண்டவர் பொறுமை உள்ளவர். பாவத்துக்கு மேல் பாவம் செய்யும் அளவுக்குப் பாவ மன்னிப்புப்பற்றி அச்சம் இல்லாமல் இராதே. "ஆண்டவரின் பரிவு எல்லையற்றது. எண்ணற்ற என் பாவங்களை அவர் மன்னித்துவிடுவார்" என உரைக்காதே. அவரிடம் இரக்கமும் சினமும் உள்ளன. அவரது சீற்றம் பாவிகளைத் தாக்கும். ஆண்டவரிடம் திரும்பிச் செல்லக் காலம் தாழ்த்தாதே. நாள்களைத் தள்ளிப்போடாதே. ஆண்டவரின் சினம் திடீரென்று பொங்கியெழும் அவர் தண்டிக்கும் காலத்தில் நீ அழிந்துபோவாய். முறைகேடான செல்வங்களில் நம்பிக்கை வைக்காதே. பேரிடரின் நாளில் அவற்றால் உனக்குப் பயன் இராது.

**பதில்பாடல் :** ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டோர் பேறு பெற்றோர்.

## நற்செய்தி : மாற்கு 9 : 41 – 50

அக்காலத்தில் இயேசுக்கிறிஸ்து தமது சீடருக்குக் கூறியது: நீங்கள் கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள் என்பதால் உங்களுக்கு ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுப்பவர் கைம்மாறு பெறாமல் போகார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். என்மீது நம்பிக்கை கொண்டுள்ள இச்சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச் செய்வோருடைய கழுத்தில் ஓர் எந்திரக் கல்லைக் கட்டி, கடலில் தள்ளிவிடுவதே அவர்களுக்கு நல்லது. உங்கள் கை உங்களைப் பாவத்தில் விழச் செய்தால் அதை வெட்டி விடுங்கள். நீங்கள் இரு கையுடையவராய் அணையாத நெருப்புள்ள நரகத்துக்குள் தள்ளப் படுவதைவிட, கை ஊனமுற்றவராய் நிலைவாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது. உங்கள் கால் உங்களைப் பாவத்தில் விழச் செய்தால் அதை வெட்டி விடுங்கள். நீங்கள் இரு காலுடையவராய் நரகத்தில் தள்ளப்படுவதைவிட கால் ஊனமுற்றவராய் வாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது. உங்கள் கண் உங்களைப் பாவத்தில் விழச்செய்தால், அதைப் பிடுங்கி எறிந்து விடுங்கள். நீங்கள் இரு கண்ணுடையவராய் நரகத்தில் தள்ளப்படுவதைவிட ஒற்றைக் கண்ணராய் இறையாட்சிக்கு உட்படுவது உங்களுக்கு நல்லது. நரகத்திலோ அவர்களைத் தின்னும் புழு சாகாது நெருப்பும் அவியாது. ஏனெனில் பலிப்பொருள் உப்பால் தூய்மையாக்கப் படுவதுபோல் ஒவ்வொருவரும் நெருப்பால் தூய்மையாக்கப்படுவர். உப்பு நல்லது. ஆனால் அது உவர்ப்பற்றுப் போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்குவீர்கள்? நீங்கள் உப்பின் தன்மை கொண்டிருங்கள். ஒருவரோடு ஒருவர் அமைதியுடன் வாழுங்கள்.

**தியானம்:** "உங்கள் கை உங்களைப் பாவத்தில் விழச்செய்தால் அதை வெட்டிவிடுங்கள். நீங்கள் இரு கையுடையவராய் அணையாத நெருப்புள்ள நரகத்துக்குள் தள்ளப்படுவதைவிட கை ஊனமுற்றவராய் நிலைவாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது" (மாற்கு 9:43) எனும் நற்செய்தி வார்த்தைகள் எம்மை ஆமாகச் சிந்திக்க அழைக்கிறது. எல்லாம் வல்ல கடவுளின் விருப்பப்படி நாம் வாழாமல், எமது சுயநலப் போக்கிலே வாழ்வது பாவம் எனப்படும். ஒருவர் நன்னெறிப்படி வாழாமல் பிறரையும் தவறான வழியில் நடக்கத் தூண்டும் வாழ்வை ஆண்டவர் இயேசு கடுமையாகக் கண்டித்து "பிறரைப் பாவத்தில் விழச் செய்வோருடைய கழுத்தில் ஒரு எந்திரக் கல்லைக் கட்டிக் கடலில் தள்ளிவிடுவதே அவர்களுக்கு நல்லது" (மாற்கு 9:42) எனக்கற்பிக்கிறார். நாம் கை, கால், கண் போன்ற எமது உடல் உறுப்புகளை இழந்தாலும் பாவம் செய்வதைத் தவிர்க்க வேண்டும் என இயேசு வலியுறுத்திக் கூறுகிறார். எனினும், பாவம் செய்யத் தூண்டும் நம் உடல் உறுப்புகளைத் துண்டிக்க வேண்டும் என்பதல்ல. மாறாக, பாவம் என்பது நம்மைக் கடவுளிடமிருந்து பிரிக்கின்ற தீய சக்தியாக இருப்பதால் அதை நாம் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்துகிறார். நாம் பாவம் செய்தால் கடவுள் நம்மைத் தண்டிப்பார். எனினும், பாவிகளாகிய எம்மை எல்லாம் வல்ல கடவுள் அன்புசெய்கிறார் என்பதால், நாம் அவரை அன்பு செய்ய அழைக்கப்படுகிறோம். கடவுளிடம் அன்பு காட்டுவோர் பிற மனிதரை அன்பு செய்யாமல் இருக்க இயலாது. ஏனெனில், வேறுபாடின்றி எல்லா மனிதரையும் அன்பு செய்வது கடவுளின் பண்பு. அத்தகைய பண்பு நம்மில் துலங்கும்போது நாம் நரக தண்டனைக்குப் பயந்து பாவத்தை விலக்கி, கடவுளின் அன்புக்கு எதிராகச் செயல்படலாகாது என்னும் உயரிய நோக்கத்தோடு வாழ்ந்திடுவோம்